பொதுவாக, ஓரிடத்தில் புதிய தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையம் தொடங்குவதற்கு சில வரையறைகள் வகுக்கப்பட்டுள்ளன. அது 25 கிலோ மீட்டர் சுற்றளவிற்குள் வேறு ஒரு தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையம் இருந்தால், அது தவிர்க்கப்பட வேண்டும் என்ற அளவுகோல் இருக்கக்கூடிய நிலையில், மாண்புமிகு உறுப்பினர் கோரும் கடையம் பகுதியைப் பொறுத்தவரையில், 18 கிலோ மீட்டர் தொலைவில் உள்ள அம்பாசமுத்திரத்திலும், 20 கிலோ மீட்டர் தொலைவில் உள்ள தென்காசியிலும், தீயணைப்பு மற்றும் மீட்புப் பணி நிலையங்கள் முழு அளவில் பணியாளர்களைக் கொண்டு சிறப்பாகத் தற்போது செயல்பட்டு வருகின்றன.

மேலும், உறுப்பினர் குறிப்பிடும் கடையம் பகுதியில் கடந்த ஐந்து ஆண்டுகளில் மொத்தம் 59 சிறிய அளவிலான தீ விபத்துகள்தான் நிகழ்ந்துள்ளன. எனவே, கடையம் பகுதியில் தீ விபத்து ஏதேனும் நிகழ்ந்தால், அம்பாசமுத்திரம் மற்றும் தென்காசி பகுதிகளில் இயங்கிவரும் தீயணைப்பு நிலையங்களைச் சார்ந்த பணியாளர்கள் மற்றும் தீயணைப்பு ஊர்திகளைக் கொண்டே மீட்புப் பணிகளை மேற்கொள்ள இயலும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 142, மாண்புமிகு உறுப்பினர் திரு. பி. அய்யப்பன், மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள்.

142—

சிமெண்ட் கால்வாய்

***51740— திரு. பி. அய்யப்பன்:**

மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உசிலம்பட்டி தொகுதி, உசிலம்பட்டி 58 கிராம கால்வாயை சிமெண்ட் கால்வாயாகக் கட்டித்தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2023 ஏப்ரல் 12]

மாண்புமிகு திரு. துரைமுருகன், நீர்வளத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) மதுரை மாவட்டம், உசிலம்பட்டி தொகுதியில் 58 கிராம கால்வாயை, சிமென்ட் கால்வாயாக அமைக்கும் திட்டம் ஏதும் அரசிடம் தற்பொழுது இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. பி. அய்யப்பன் அவர்கள்.*

முற்பகல் 10–10

திரு. பி. அய்யப்பன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களையும், புரட்சித் தலைவி அம்மா அவர்களையும் வணங்கி, அண்ணன் ஓ.பி.எஸ். அவர்களுக்கும் வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன். உசிலம்பட்டி பின்தங்கிய பகுதி. அந்த பின்தங்கிய பகுதியில் 58 கிராம கால்வாய் திட்டம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சியில் நிறைவடைந்து, அந்தக் கண்மாய்க்கு வைகை அணையிலிருந்து கடந்த இரண்டு ஆண்டுகளாகத் தண்ணீர் திறந்து விடப்பட்டிருக்கிறது. அந்த அடிப்படையில், ஏற்கெனவே இந்த அவையில் புதூர் கிராமம் முதல் புள்ளிமான்கோம்பை வரை சிமென்ட் கால்வாய் அமைத்துக் கொடுக்க மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் கோரியிருந்தோம். அந்த அடிப்படையில், கடந்த நீர்வளத் துறை மானியக் கோரிக்கை விவாதத்தின்போது ஐந்து கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்ததற்கு எனது தொகுதி மக்கள் சார்பாகவும், எனது சார்பாகவும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அந்த நிதியிலிருந்து எவ்வளவு பணிகள் மேற்கொள்ளப்படும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் கேட்டுக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. துரைமுருகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உசிலம்பட்டி ஒரு வறட்சியான இடம். வைகை ஆறு ஓடினாலும் அந்த மக்களுக்கு அதனால் பயனில்லை. வறண்டு போன வயல்களாக இருக்கின்றன. அந்தக் கிராம மக்களுக்கு, வைகை ஆற்றில் தண்ணீர் மிகையாக வருகிறபோது,*

62 அடிக்கு மேல் வருகிறபோதுதான் தண்ணீர் வரும். எனவே, மழைக்காலங்களில் வரும் அந்த நீரையாவது கொண்டு போய்ச் சேர்க்க வேண்டுமென்பதற்காக தலைவர் கலைஞர் அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது, 1996 ஆம் ஆண்டு ஒரு Master Plan–ஐ போடச் சொன்னார்கள். அப்படி போடப்பட்ட திட்டம்தான் 58 கிராமங்களுக்கு வைகை அணையிலிருந்து தண்ணீர் கொண்டு போகும் திட்டம். அப்போது அதற்கு விழா எடுக்கப்பட்டது. அந்தத் துவக்க விழாவை 9–10–1996–ல் உசிலம்பட்டியில், மிகப் பெரும் விழாவாக எடுத்தோம். அதனுடைய அன்றைய மதிப்பீடு 33.61 கோடி ரூபாய். அந்தத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டபோது, நாங்கள் கொஞ்சம் நாள் ஆட்சியில் இருந்தோம். பிறகு நாங்கள் ஆட்சியில் இல்லாததால் அது அப்படியே கிடப்பிலே கிடந்தது. நாங்கள் எப்போதெல்லாம் ஆட்சிக்கு வருகிறோமோ, அப்போதெல்லாம் அதில் கொஞ்சம் வேலை செய்வது உண்டு. தொட்டிகட்டி பாலம் என்ற ஓர் இடம் உண்டு. அந்த இடத்தில் கால்வாய் வெட்ட முடியாது. காரணம், அது மலையோரத்தில் உள்ள இடம். அங்கு நிறைய பாம்புகள் உண்டு. இருந்தாலும், ஒரு நாள் இரவு முழுவதும் தொட்டிகட்டி பாலத்தின் அருகில் உட்கார்ந்து அந்த திட்டத்திற்கான வேலைகளை நான் செய்ய வைத்து, அதையும் நாங்கள் கட்டி முடித்திருக்கிறோம். இப்போது நீங்கள் கேட்டதுபோல் சிமெண்ட் கால்வாயாக மாற்றலாம் என ஒரு திட்டத்தை அறிவித்தோம். நான் இல்லையென்று சொல்லவில்லை. ஆனால், சிமெண்ட் கால்வாய் ஆரம்பித்தால் அதனுடைய ஓதம் மற்ற இடங்களுக்கு போய்ச் சேராது. தண்ணீர் மட்டும்தான் போகும். பக்கத்தில் உள்ள கிராமங்களுக்கு போய்ச் சேராது. ஆகையினால், அதனை மாற்றிவிட்டு, எங்கெங்கு கால்வாய்கள் பழுதடைந்திருக்கின்றனவோ அந்த இடங்களில் மட்டும் repair செய்தால்போதும் என்பதற்காக இந்த budget–லே 5 கோடி ரூபாய் நிதி ஒதுக்கியிருக்கிறோம். ஆகையினாலே சிமெண்ட் கால்வாய் அமைக்க முடியாவிட்டாலும், கால்வாய்களை ஆங்காங்கே செப்பனிட்டு, கிராமங்களுக்குத் தண்ணீர் போவதற்கு வேண்டிய நடவடிக்கை எடுக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. பி. அய்யப்பன் அவர்கள்.

திரு. பி. அய்யப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதூர் முதல் புள்ளிமான்கோம்பை வரை தரைக்கு

2023 ஏப்ரல் 12]

மேல் கரைகள் போடப்பட்டிருக்கின்றன. அதனால் 360 கன அடி தண்ணீர் எடுக்கப்பட்ட சூழ்நிலையில் தற்போது 150 கன அடி தண்ணீர்தான் எடுக்கப்பட்டு வருகிறது. கிட்டத்தட்ட 33 கண்மாய்களுக்கு அந்தத் தண்ணீர் பாய வேண்டும். இந்த 150 கன அடி என்பது அந்த 33 கண்மாய்களுக்கும் நீர் போய்ச் சேர முடியாத அளவிற்கு இருக்கிறது. அங்கு 360 கன அடி தண்ணீர் வந்தால், அந்தக் கரைகள் உடைந்துவிடும். பின்னர் அந்த உடைப்பை சீர் செய்வதற்கு நாளாகும். அதன்பின் வைகை அணையில் தண்ணீர் 62 அடிக்கு மிகவும் குறைந்துவிடும். 62 அடிக்குமேல் தண்ணீர் இருந்தால்தான் அந்தக் கால்வாயில் தண்ணீர் திறக்கப்படும். தண்ணீர் குறைந்துவிட்டால், இந்தக் கால்வாயைச் சீர் செய்தாலும் தண்ணீர் வரப் போவதில்லை. அந்த ஒரு காரணத்திற்காக புதூர் முதல் புள்ளிமான்கோம்பை வரை கண்டிப்பாக கால்வாய் அமைத்துக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திருமங்கலம் விரிவாக்கக் கால்வாயில், உசிலம்பட்டி, செல்லம்பட்டி பகுதிகளில் 20 கண்மாய்களுக்கும், திருமங்கலம் ஒன்றியத்தில் 20 கண்மாய்களுக்கும் விரிவாக்கக் கால்வாய்மூலம் தண்ணீர் சென்று கொண்டிருக்கிறது. அதற்கும் சிமென்ட் கால்வாய் அமைக்க வேண்டுமென்று கடந்த சட்டமன்றக் கூட்டத்தொடரில் கேட்டிருந்தோம். அதற்கும் நிதி ஒதுக்கீடு செய்து, தற்போது பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. அதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும், அரசுக்கும் நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

முற்பகல் 10–15

உசிலம்பட்டி தொகுதி, திருமங்கலம் பிரதான கால்வாய், கும்பனம்பட்டி ஆறாம் number *கால்வாயில் கல்லப்பட்டி, போத்தம்பட்டி, பெருங்காமநல்லூர் உட்பட 18 கிராமங்களுக்கும் இந்த ஆறாம்* number *கால்வாயிலிருந்துதான் தண்ணீர் செல்கிறது. அந்தக் கால்வாய்கள் அனைத்தும் மூடப்பட்டுவிட்டதால் தண்ணீர் செல்ல வழி இல்லை. தற்பொழுது நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு அந்தக் கால்வாயிலும், ஆறாம்* number *கால்வாயிலும் சீரமைப்புப் பணிகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. அதற்கும் எனது சார்பாகவும், தொகுதி மக்கள் சார்பாகவும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும், அரசுக்கும் நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். அதைப்போல, சேடப்பட்டி ஒன்றியம், வல்லபுரம் ஊராட்சியில் உள்ள அய்யனார் கோயில்*

[2023 ஏப்ரல் 12

அணைக்கட்டினைத் தூர்வாரி, விரிவாக்கம் செய்து, அதிலுள்ள மதகுகளைச் சரி செய்து அந்தப் பகுதி மக்களுக்கு நீர் ஆதாரம் கிடைக்க வழிவகை செய்ய வேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறேன். உசிலம்பட்டி, உத்தப்பநாயக்கனூர் பகுதியில், மலட்டாறு அணை இருக்கிறது. அந்த மலட்டாறு அணையினையும் தூர்வாரி, அந்தப் பகுதி மக்களுக்குத் தண்ணீரைத் தேக்கி வழங்க வேண்டுமென்றும். . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: போதும்.

திரு. பி. அய்யப்பன்: அசுவமாநதி நீர்த்தேக்கத்தை விரிவுபடுத்தி, உசிலம்பட்டி பகுதி மக்களுக்கும், மானாவாரியாக இருக்கின்ற அந்தப் பகுதிக்கும். . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு அமைச்சர் அவர்களின் பதிலைக் கேட்டுக்கொள்வோம்.

திரு. பி. அய்யப்பன்: நீர் வளத்தைச் சீர் செய்ய வேண்டுமென்றும் கேட்டுக்கொண்டு நன்றி கூறி விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. துரைமுருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேசுவதற்கு வாய்ப்பு இல்லாத காரணத்தால், இதைப் பயன்படுத்திக்கொண்டு, தொகுதி நிலைமையைப் பற்றி பேசியிருக்கிறார். MLA அவர்களைப் பாராட்டுகிறேன். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இல்லை அவர் நன்றிதான் சொல்கிறார். இந்த ஆட்சியிலே, நிறைய காரியங்கள் நடந்து கொண்டிருக்கின்றன. அதற்காக நன்றி சொல்கிறார்.

மாண்புமிகு திரு. துரைமுருகன்: இடையிடையில் இவர் வேறு. (சிரிப்பு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் அங்கே கவனியுங்கள். அங்கே என்னையே பார்த்துக்கொண்டிருக்கிறார்கள்.

மாண்புமிகு திரு. துரைமுருகன்: உங்கள் subject வருகிறது. அப்போது பார்த்துக்கொள்கிறேன். ஆகையால், நீங்கள் அப்படி சொன்னதெல்லாம் நான் பார்த்திருக்கிறேன். நீங்கள் புள்ளி மான்,

2023 ஏப்ரல் 12]

ஏதோ மான் என்று கூறினீர்களே, நீங்கள் கூறிய அந்த இடங்களுக்கு அதிகாரிகளை அனுப்புகிறேன். உள்ளபடியே அங்கு சேதாரம் இருக்குமானால், அந்த இடத்திலாவது சிமெண்ட் போடுவதற்குரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. திண்டுக்கல் சி. சீனிவாசன் அவர்கள்.*

திரு. திண்டுக்கல் சி. சீனிவாசன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அண்ணன் திரு. துரைமுருகன் அவர்கள் இங்கே பேசுகின்றபொழுது, அதற்கு சிமெண்ட் கால்வாய் அமைக்க முடியாது என்று சொல்லியிருக்கிறார்கள். பணம் ஒதுக்கப்பட்டு இருக்கிறது என்று சொன்னீர்கள் நன்றி. ஆனாலுங்கூட, T.V.-யில் என்னுடைய படமும் வந்திருக்கிறது. அது எங்களுக்குப் பக்கமாக இருப்பதனால்தான் T.V.-யைப் பார்த்து பேசுகிறேன். T.V.-யில் படம் வருவது புதிதாக இன்று அறிவித்தீர்கள். என் படமும் வந்து இருக்கிறது. பரவாயில்லை (சிரிப்பு) ரொம்ப நன்றி. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் அருமையான வேலை செய்திருக்கிறார். எல்லோருக்கும் நன்றிகள்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *இது இங்கு மட்டும் அல்ல, இதை தமிழ்நாடு முழுவதும் பார்க்கலாம்.*

திரு. திண்டுக்கல் சி. சீனிவாசன்: *யார் பார்க்கிறார்கள் என்று தெரியவில்லை.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *உலகம் பூராவும் பார்க்கலாம்.*

திரு. திண்டுக்கல் சி. சீனிவாசன்: *சார் ரொம்ப நன்றி. மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள் சிமெண்ட் கால்வாய் அமைக்க முடியாது என்று சொல்வது, அந்தப் பகுதிக்கு ஒரு பாதிப்பாக இருக்கும். மாண்புமிகு உறுப்பினர் திரு. பி. அய்யப்பன் அவர்கள் கேட்டிருக்கிற கேள்வி, அந்தப் பகுதி மக்களுக்காக உருவானது. மேலும், முன்னாள் முதலமைச்சர், ஐயா டாக்டர் கலைஞர் அவர்கள் காலத்தில் செய்யப்பட்டது என்று சொன்னார். அது அப்படியே நிறுத்தப்பட்டது. இப்பொழுது பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சராக இருக்கக்கூடிய மாண்புமிகு திரு. R.S. ராஜகண்ணப்பன் அவர்கள் பொதுப் பணித் துறை அமைச்சராக இருந்தபொழுது, மாண்புமிகு*

புரட்சித் தலைவி அம்மா அவர்கள் எடுத்த முயற்சியின் மூலமாகத்தான் 58 ஆம் கால்வாய் அந்தப் பகுதி மக்கள் நலனுக்காக வந்தது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *இல்லை. அது யார் கொண்டு வந்தார்கள், வரவில்லை. இப்போது என்ன கேள்வி என்று கேளுங்கள்.*

திரு. திண்டுக்கல் சி. சீனிவாசன்: *அதிலே எங்களுடைய சாதனை இருக்கிறது என்று சொல்ல வருகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *என்ன வேண்டும் என்று கேளுங்கள்.*

திரு. திண்டுக்கல் சி. சீனிவாசன்: *மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள். . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *துணைக் கேள்வி உங்களுக்கு எதற்காகத் தந்தேன் என்றால், 58 ஆம் கால்வாய் உங்கள் பகுதியிலே உள்ளது. அதனால்தான் நான் உங்களுக்கு அந்த வாய்ப்பைத் தந்திருக்கிறேன். துணைக் கேள்வி இருந்தால் சொல்லுங்கள்.*

திரு. திண்டுக்கல் சி. சீனிவாசன்: *எல்லாமே* coincidence *ஆகிவிட்டது. சிமென்ட் கால்வாய் அவசியம் நீங்கள் அமைத்துத் தர வேண்டும். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், நீங்கள் பேசும்போது மிகவும் வறட்சி என்று சொல்லியிருக்கிறீர்கள். வறட்சி என்றால்* drought. *வறுமைக்கோட்டிற்குக் கீழே இருக்கிற பகுதி அது. நம்முடைய மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் திருநெல்வேலிக்கு செல்ல வேண்டுமென்றால் அந்த வழியாகத்தான் செல்ல வேண்டும். ஆகவே, கருணை செய்யுங்கள் என்று கேட்டுக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அதனால் மிரட்டுவதுபோல் கூறிவிட்டீர்களா? (சிரிப்பு). மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. துரைமுருகன்: *திரு. திண்டுக்கல் சீனிவாசனுக்கு கேள்வி கேட்பதைவிட, அந்தப் படம் வந்ததைப் பார்த்து சந்தோஷம். சிமென்ட் கால்வாய் அமைக்கக் கூடாது என்பதல்ல அரசின் திட்டம். சிமென்ட் கால்வாய் அமைக்க வேண்டுமென்றுதான் சர்க்காரே நினைத்து 2021–2022 ஆம் ஆண்டு பட்ஜெட்டில்*

2023 ஏப்ரல் 12]

60 கோடி ரூபாய் ஒதுக்கப்படும் என்று அறிவித்தோம். ஆனால், அந்தப் பகுதியிலே இருக்கக்கூடிய விவசாயிகள், அப்படிப்பட்ட நிலைமை ஏற்பட்டால், பக்கத்திலே எங்களுக்கு வருகிற நீர் ஆதாரம்கூட கிடைக்காமல் போய்விடும் என்று அவர்கள் தெரிவித்த காரணத்தாலும், எல்லா இடங்களிலும் செய்வதைவிட damage *ஆன இடங்களில் மட்டும் செய்தால் போதும் என்ற முடிவுக்கு வந்த காரணத்தால்தான், எல்லா இடங்களுக்கும் சிமெண்ட் கால்வாய் தேவையில்லை என்று கருதுகிறோமே தவிர, சிமெண்ட் கால்வாய் அமைக்கக் கூடாது என்பதல்ல. அந்த எண்ணத்தை முதலிலே நீங்கள் சொல்வதற்கு முன்னால் நாங்களே முடிவெடுத்து, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 60 கோடி ரூபாயைக் கடந்த பட்ஜெட்டில் ஒதுக்குவதாக உத்தரவிட்டார்கள். ஆகையினால், இது கலைஞர் அவர்கள் கொண்டு வந்த திட்டம். கண்போல் அதைக் காப்போம்.*

முற்பகல் 10–20

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஓ. பன்னீர்செல்வம் அவர்கள்.*

திரு. ஓ. பன்னீர்செல்வம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உசிலம்பட்டி பகுதியில் இருக்கின்ற 58 கிராமங்களுக்கு 58 ஆம் கால்வாய் திட்டம் மூலமாகத் தண்ணீர் கொண்டு செல்வதற்கு 1996 ஆம் ஆண்டு மாண்புமிகு அமைச்சர் அவர்களால் கலைஞர் அவர்கள் முதலமைச்சராக இருந்தபோதுதான் அரசாணை பிறப்பிக்கப்பட்டது. அது பல்வேறு கட்டங்களைக் கடந்து 3, 4 முறை* Revised Estimates *தயாரிக்கப்பட்டு, கிட்டத்தட்ட 90 கோடி ரூபாயில் சுமார் 14, 15, 16 ஆண்டுகளுக்குப் பிறகுதான் இந்தத் திட்டம் முடிவுறும் நிலைக்கு வந்தது. இருந்தாலும் பல்வேறு கட்டங்களைக் கடந்து. . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *துணைக் கேள்விக்கு வந்துவிடலாமே! (குறுக்கீடு) அந்தக் கால்வாயை சிமெண்ட் கால்வாயாக அமைக்க வேண்டும்.*

திரு. ஓ. பன்னீர்செல்வம்: *தொடக்கத்தில் பிறப்பிக்கப்பட்ட அரசாணையில், வைகை அணையில் தண்ணீர்* surplus *ஆகும்பொழுதும், இராமநாதபுரம் பெரிய கண்மாய்* surplus *ஆகும்பொழுதும்தான் 58 ஆம் கால்வாய்க்குத் தண்ணீர்*

கொண்டு செல்லும்படி இருக்கிறது. மிகப் பெரிய அளவில், பேய் மழை பெய்தால்தான் இராமநாதபுரம் கண்மாயிலும், வைகை அணையிலும் தண்ணீர் surplus ஆக இருக்கின்ற ஒரு சூழ்நிலை இருக்கிறது. அங்கு அதுவே பெரிய போராட்டமாக இருக்கிறது. 62 அடிக்குமேல் நீர் வந்தாலும் அந்தக் கால்வாய்க்கு நீர் எடுத்துச் செல்ல அரசாணை பிறப்பிக்கப்படவில்லை. இராமநாதபுரம் கண்மாயில் தண்ணீர் பெருக வேண்டும் என்ற காரணத்தைச் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும், மாண்புமிகு அமைச்சர் அவர்களும், 58 ஆம் கால்வாய் எந்த நோக்கத்திற்காக அமைக்கப்பட்டதோ அந்த நோக்கம் நிறைவேறுவதற்கு அந்தக் கால்வாயின் தண்ணீர் அளவு 62 அடிக்குமேல் வருகின்றபோது அதிலிருந்து 58 கிராமங்களுக்கும் தண்ணீர் கொண்டு செல்வதற்கான அரசாணையைப் பிறப்பிக்கும்படி அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. துரைமுருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வைகை அணையில் full water level 62 feet. அதற்கு மேல் தண்ணீர் வந்தால்தான் அந்தக் கால்வாய்க்குத் தண்ணீர் கொடுக்க முடியும். அதேநேரத்தில், இராமநாதபுரம் கண்மாயில் தண்ணீர் நிரம்பிய பிறகுதான் 58 ஆம் கால்வாய்க்குத் தண்ணீர் கொண்டு செல்ல வேண்டும். அப்படி ஒரு clause–ஐ நாங்கள் போடவில்லையென்றால் அன்றைக்கு இந்தத் திட்டத்தை நிறைவேற்றியிருக்கவே முடியாது. அது ஏன் என்று உங்களுக்கே தெரியும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த clause–ஐ போட்டும்கூட இந்த ஒரு சிறிய திட்டத்தின்மூலம் 58 கிராமங்களுக்குத் தண்ணீர் கொடுப்பதற்கு 27 வருடங்கள் ஆகியுள்ளன. இந்தத் திட்டத்தைத் தொடங்கியதும் நாங்கள்தான்; கொடுத்ததும் நாங்கள்தான். ஆனாலும், 27 வருடங்கள் கடந்துள்ளன. இது சாதாரணமானதல்ல. மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டதைப்போல, இன்னமும் அந்த மக்களுக்கு முழுமையாகக் கிடைக்கவில்லை. கலைஞர் அவர்கள் கொண்டு வந்த இந்தத் திட்டம் அவர்களுடைய கனவுத் திட்டம். ஆகவே, கண் போல் அதைக் காப்பாற்றி, அந்த மக்களுக்குத் தண்ணீர் கொண்டு போய் சேர்ப்போம். (குறுக்கீடு) நாங்கள்தான் அரசாங்கம்.